**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1. (L.W.1)**
**SC.NO.132/2022**

| | | |
|---|---|---|
| **Name** | : | கார்த்திக் |
| **Father Name** | : | மகாதேவன் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling /Occupation** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.06.2024

எதிரிகள் 1 முதல் 9 ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை

ஆஜர் எதிரிகளை தெரியும். 24.10.2021 அன்று மாலை 5 மணிக்கு என் சின்ன மகன் கோகுலகிருஷ்ணன் டி.கே.எம். காலேஜ் ரோட்டிற்கு போகும்போது ராஜகுரு, சிட்டிபாபு இருவரும் இந்த பக்கம் என்னடா வேலை என்றுகேட்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் என்னடா என்னை கேட்பதற்கு என்று என் மகன ் கேட்டுள்ளார்கள் அதற்கு அவர்கள் ங்கோத்தா தேவடியாப்பையன் என தவறான வார்த்தைகளால் திட்டி அடித்துள்ளார்கள். ராஜகுரு, சிட்டிபாபும் கன்னத்திலும், முகத்திலும் கையிலும், காலிலும் உருட்டுக்கட்டையால் அடித்துள்ளார்கள். மாதவன் என்பவர் என் மகனை அழைத்துச்சென்று அடுக்காம்பாறை மருத்துமனையில் சேர்த்துள்ளார். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். விசாரித்து நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டனர் அந்த புகார் வாக்குமூலம் எழுதினார்கள் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1**.

போலிசார் விசாரணை செய்த பிறகு என் மகன் கண்விழித்த பிறகு மாதவன், தண்டபாணி (எ) தண்டா, சின்னகுட்டி 2, 3 நபர்கள் பெயர் ஞாபகமில்லை மறந்துவிட்டேன் ஆகியோர்கள் அடித்ததாக என் மகன் சொன்னார். தலையில் இடுப்பில், கன்னம், கை, முட்டி, விரலை மடித்து கொடுமை செய்ததாகவும் என் மகன் கூறினார். சிகிச்சை பலனின்றி 5ம் தேதி உயிர் விட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்வதற்கு ஆவணங்கள் சரியாக தெரியவில்லை என்றும், எனவே நகல்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், 1 முதல் 3 சாட்சிகள் வரை குறுக்கு விசாரணையை ஒன்றாக செய்வதாகவும் கூறி மனு தாக்கல செய்துள்ளார்கள். எனவே குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2024.06.25 18:27:15 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.